ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1718/32 - 2011 අගෝස්තු 12 වැනි සිකුරාදා - 2011.08.12

*1718/32 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2008 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்*

*3(4) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், பசில் ரோஹன ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் -*

*1. மேற்சொன்ன சட்டத்தின் நோக்கத்திற்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இனம் காணப்பட்ட அத்துருகிரியவில் தற்போது அமைந்துள்ள தொழிற்சாலையின் இயந்திரக் கொள்திறனை உயர்த்துவதற்கும் தொழில்நுட்பக்கலை உத்தியுடன் கூடிய நவீன இரும்பு ஆலை ஒன்றினை தாபிப்பதற்கும் கருத்திட்டத்தின் இயைபான தகவல் அடங்கிய அறிவித்தலொன்று 2011, மே 30 ஆந் திகதிய 1708/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது எனவும் ;*

*2. அத்துருகிரியவில் தற்போது அமைந்துள்ள தொழிற்சாலையின் இயந்திரக் கொள்திறனை உயர்த்துவதற்காகவும் தொழில்நுட்பக்கலை உத்தியுடன் கூடிய நவீன இரும்பு ஆலை ஒன்றினைத் தாபிப்பதற்காகவுமான கருத்திட்டத்தை செயல்நுணுக்க கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கு 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது எனவும் ;*

*3. மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் " அத்துருகிரியவில் அமைந்துள்ள தற்போதைய தொழிற்சாலையின் இயந்திரக் கொள்திறனை உயர்த்துவதற்காகவும் தொழில்நுட்பக்கலை உத்தியுடன் கூடிய நவீன இரும்பு ஆலை ஒன்றினைத் தாபிப்பதற்காகவுமான கருத்திட்டம்" என அழைக்கப்படவும் அறியப்படவும் வேண்டும் எனவும் ;*

*4. மேற்கூறப்பட்ட கருத்திட்டமானது, 2011, மே 19 ஆந் திகதி அன்று இலங்கை முதலீட்டுச் சபையுடன் கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் (MOU) திகதியிலிருந்து விரிவாக்கல் அலகினை ஆரம்பிக்கும் எனவும் ;*

*5. கருத்திட்ட கம்பனி தொடர்பில் இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களிலிருந்தான விலக்களிப்பு அதன்கண் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய ஏற்புடைத்தானதாகத் தொடங்குதல் வேண்டும் என்பதுடன் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு நடைமுறையிலிருத்தலும் வேண்டும் எனவும்*

*வெளிப்படுத்துகின்றேன்.*

**அட்டவணை**

(அ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் :

கருத்திட்டக் கம்பனி வரி விதிக்கப்படற்பாலதான இலாபமீட்டும் முதலாம் (1 ஆம்) ஆண்டு அல்லது கருத்திட்டக் கம்பனியால் புதிய ஆலையில் தொழிற்பாடுகள் தொடங்கிய பின்னர் இரண்டு ஆண்டுகள் என்பனவற்றுள் எந்த ஆண்டு முதலில் வருகின்றதோ அந்த ஆண்டு தொடக்கம் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் பத்து (10) ஆண்டு கால வரி விடுமுறைக் காலப்பகுதியொன்று வழங்கப்படும். அதன் பின்னர் வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் கடைசித் திகதியை உடனடுத்து வரும் ஐந்து (5) ஆண்டுகளைக் கொண்ட மேலும் ஒரு காலப்பகுதிக்கு வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் ஏற்புடைத்தாகும் வரி வீதத்தின் அரைவாசிக்குச் சமமாக பகுதியளவிலான விலக்களிப்பொன்று வழங்கப்படும். ஐமிச்சத்தைத் தவிர்ப்பதற்கு மேலே தரப்பட்டுள்ளவாறு பதினைந்து (15) ஆண்டுகள் முடிவுற்றதன் பின்னர் கருத்திட்டக் கம்பனி தொடர்பில் அப்போது நிலவும் பொது வரி அமைப்பு முறை ஏற்புடையதாதல் வேண்டும்.

எவ்வாறாயினும், 2006 ஆம் ஆண்டின்13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் பொருளாதார சேவை விதிப்பனவானது 0.25 வீதம் ஏற்புடையற்பாலனதாகும்.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டம் (சே. பெ. வ.) மற்றும் அதன் திருத்தங்கள்:

கருத்திட்டக் கம்பனி மற்றும் முதலீட்டுச் சபை என்பவற்றிற்கிடையில் இது தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் (MOU) திகதியிலிருந்து கருத்திட்ட அமுலாக்கல் கால எல்லையான ஐந்து (5) ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு முதலீட்டுச் சபையின் அனுமதியுடன் கருத்திட்டம் சார்ந்த மூலதனப் பண்டங்கள் மற்றும் நிர்மாணத்திற்கான பொருட்களின் இறக்குமதியின் மீது சேர்பெறுமதி வரியின் கொடுப்பனவு விலக்களிக்கப்படும்.

(இ) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள், விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் :

கருத்திட்டக் கம்பனி மற்றும் முதலீட்டுச் சபை என்பவற்றிற்கிடையில் இது தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் திகதியிலிருந்து கருத்திட்ட அமுலாக்கல் கால எல்லையான ஐந்து வருட (5) காலப்பகுதியொன்றுக்கு முதலீட்டுச் சபையின் அனுமதியுடன் கருத்திட்டம் சார்ந்த மூலதனப் பண்டங்கள் மற்றும் நிர்மாணத்திற்கான பொருட்களின் இறக்குமதியின் மீது துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பிலான கொடுப்பனவு விலக்களிக்கப்படும்.

(ஈ) 2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டம் :

கருத்திட்டக் கம்பனி மற்றும் முதலீட்டுச் சபை என்பவற்றிற்கிடையில் இது தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் திகதியிலிருந்து கருத்திட்ட அமுலாக்கல் கால எல்லையான ஐந்து வருட (5) காலப்பகுதியொன்றுக்கு முதலீட்டுச் சபையின் அனுமதியுடன் கருத்திட்டம் சார்ந்த மூலதனப் பண்டங்கள் மற்றும் நிர்மாணத்திற்கான பொருட்களின் இறக்குமதியின் மீது நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி தொடர்பிலான கொடுப்பனவு விலக்களிக்கப்படும்.

(உ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம் :

எதிர்மறையான நிரலில் தரப்பட்டுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய கருத்திட்டம் சார்ந்த மூலதனப் பண்டங்கள் மற்றும் நிர்மாணத்திற்கான பொருட்களின் இறக்குமதி தொடர்பில் சுங்கத் தீர்வையிலிருந்தான விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். எவ்வாறாயினும், எதிர்மறையான நிரலில் உள்ள பொருட்களும் அவை உள்ளூர் சந்தைகளில் போதிய அளவில் கிடைக்காதவிடத்து, சபையால் அனுமதிக்கப்பட்டவாறாக கருத்திட்டக் கம்பனி மற்றும் முதலீட்டுச் சபை என்பன புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஈடுபட்ட திகதியிலிருந்து கருத்திட்ட அமுலாக்கல் கால எல்லையான ஐந்து வருட (5) காலப்பகுதிக்கு கருத்தில் கொள்ளப்படும்.

(ஊ) மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் :

மேற்சொல்லப்பட்ட ஆலைகளுக்காக மூலதனப் பண்டங்களை இறக்குமதி செய்தல் என்பது பாரிய மூலதனப் பண்டங்களையும் உள்ளடக்கியதுடன் துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்தும் சுங்கத் தீர்வை ஏதேனும் இருப்பின் அதிலிருந்தும், புதிய ஆலையின் வர்த்தக ரீதியிலான தொழிற்பாடுகள் ஆரம்பிக்க ஆறு (6) மாதங்கள் முன்னர் அல்லது புதிய ஆலைக்கான இறக்குமதிகளை ஆரம்பித்த முதல் திகதி என்பவற்றுள் எது பின்னர் வருகின்றதோ அந்த திகதியிலிருந்து எட்டு ஆண்டு காலப்பகுதி ஒன்றுக்கு சபையின் அனுமதியுடன் விலக்களிக்கப்படும்.

பசில் ரோஹன ராஜபக்ஷ, பா. உ.,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2011, ஓகத்து 10.

8-687

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.